World Tamil Christian Fellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# எபேசியர்

கிறிஸ்தவ வேதசாஸ்திரத்தில் மிகப் பெரிய அர்த்தமுள்ள சொற்களுள்ளன. நாம் அவற்றில் பொதிந்துள்ள சரியான கருத்தையறிந்துகொள்ளல் அவசியமாகும். அவையாவன:-

நியாயப்படுத்தல்(**Justification)**
தேவநீதி(**Righteousness)**
பரிசுத்தப்படுத்தல்**(Sanctification)**
பரிசுத்தப்படுதலும் முழுமையாகுதலும் **(Progressive Sanctification)**

## நியாயப்படுத்தல்

வேதாகமத்தில் இது ஒரு சட்ட வல்லுனர்களால் அங்கீகரிக்கப்பட்ட வார்த்தையாகும். கிரேக்க மொழியில் இதன் அர்த்தம் நீதிமானென்று அறிக்கையிடுதலாகும். தேவன் ஒரு பாவியைக் குற்றமற்றவனென்று அறிக்கையிடுவது சட்டரீதியாக சரியான செயலாகும். தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள் - பாவியானவன் இப்போது பாவமற்றவன் என்பதல்ல இதன் பொருள்; பாவமற்றவனாக ‘‘அறிக்கைசெய்யப்பட்டுள்ளான்’’. இந்த அறிக்கையானது பாவியை நீதிமானாக்குகின்றது. அதாவது தேவனுடன் ஒப்புரவாகின்றோம். இந்த அறிக்கை அல்லது நியாயப்படுத்தல் சிந்தப்பட்ட கிறிஸ்து இயேசுவின் திரு இரத்தத்திலேயே தங்கியுள்ளது.

மார்ட்டீன் லூதரென்பவர் யேர்மனியிலுள்ள விட்டன்பேர்க் என்னும் இடத்தில் வாழ்ந்த ஒரு கத்தோலிக்கத் துறவியாவார். அவர் வேதாகமத்தை நன்கு படித்து அறிந்தவராயிருந்தும், தேவனில் அமைதிகாண பல வருஷங்களாக முயற்சித்தார். வேதாகமத்தின்மூலம் அமைதியைத் தேடியலைந்தும் அவரால் கண்டடைய முடியவில்லை. கடவுள் தன்மீது கோபங்கொண்டு தூரமாயுள்ளாரென்று அவர் நம்பினார். அவர் ரோமுக்குப் பயணம் மேற்கொண்டபொழுது அவரது வாழ்வில் ஒரு திருப்பமுண்டாயிற்று. அவர் கண்ணீரோடு தேவாலயத்தின் ஒவ்வொரு படியாக முத்தமிட்டவண்ணம் தவழ்ந்தபடி ‘‘பரமண்டலங்களிலிருக்கின்ற எங்கள் பிதாவே’’ என்று ஜெபித்தார்.

மாடியின் முதற்படியை அடைந்தபோது திடீரென்று ‘‘நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்’’ என்னும் வேதவசனம் அவர் மனதில் தோன்றியது. அந்த மிகப்பெரிய அற்புதமான தருணத்தில்தான் அவருக்குப் புரிந்தது – தவழ்தினாலோ, முத்தமிடுவதினாலோ, கோயிலுக்குச் செல்வதினாலோ அல்லது மனித முயற்சியினாலோ அல்ல - இயேசுக்கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே நாம் தேவனுடன் ஒரு சரியான உறவு வைத்துக்கொள்ள முடியும்.

இந்த மிகப்பெரிய உண்மையின்மூலம் உண்டாகிய ஒரு தீப்பொறிதான் புரட்டஸ்டான்ட் சீர்திருத்தத்தை உலகம் முழுவதும் பரப்பியது. நாம் இன்று இந்தப் புரட்டஸ்டான்ட் சீர்திருத்தத்தின் வாரிசுகளாக வாழ்கிறோம். எப்படியெனில் மார்ட்டீன் லூதர் விசுவாசித்ததையே நாமும் இன்று விசுவாசிக்கின்றோம். அதாவது இயேசுக்கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே நாம் நியாயப்படுத்தப்படுகின்றோமேயல்லாமல், சட்டதிட்டங்களால்ல. யோபு பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு கேட்ட கேள்விக்குரிய பதில் *இப்படியிருக்க, மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி?* (யோபு 25:4)

வேதாகமத்தில் ஒரேயொரு பதில்தானுண்டு. <u>அவன் இயேசுக்கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே, தேவனுடன் ஒரு சரியான உறவு வைத்துக்கொள்ளமுடியும்.</u>

ரோமர் 5:9. *இப்படி* ***<u>நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க,</u>*** *கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

2 கொரிந்தியர் 5:21. ***<u>நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு,</u>*** *பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

1 பேதுரு 2:24. *நாம் பாவங்களுக்குச் செத்து,* ***<u>நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு,</u>*** *அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*

ரோமர் 5:1 *இவ்விதமாக,* ***<u>நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,</u>***

*நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.*

ரோமர் 3:28 *ஆதலால் **<u>மனுஷன்</u>** நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் **<u>விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்</u>** என்று தீர்க்கிறோம்.*

மேற்கூறிய வசனங்களிலிருந்து, நாம் கிறிஸ்து இயேசுவின் திரு இரத்தத்தினாலேயே நியாயப்படுத்தப்படுகின்றோம் என்பது தெட்டத்தெளிவாகப் புலனாகின்றது<u>. நியாயப்படுத்தலென்பது, தேவன் பாவியை அவன் கிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசத்தின்பொருட்டு, நீதிமானென்று அறிக்கையிடும் ஒரு தெய்வீகமான அற்புதமாகும்.</u> அதுமட்டுமல்ல, நியாயப்படுத்துதல் விசுவாசத்தினால் உண்டாகிறது – கிரியைகளினாலல்ல. இந்த நியாயப்படுத்தலானது தேவனுடன் ஒரு சரியான உறவைத் தருவதுடன் தேவனுடைய righteousnessஐயும் தருகின்றது.

இரட்சிக்கப்படுதலென்பது தேவன் நமது பாவங்களாலுண்டான அவருடைய கோபாக்கினையிலிருந்து எம்மை விடுவிப்பதாகும்.

இரட்சிக்கப்படுதலென்பது நாம் தேவனுக்கு முன்பாக நியாயப்படுத்தப்பட்டுள்ளோம். கிறிஸ்தவர்கள்மட்டுமே நியாயப்படுத்தலுக்குள்ளாகலாம்.

ஒரு உதாரணத்துக்கு – நான் ஒரு மிகவும் விலையுயர்ந்த புதிய வடிவமைப்புள்ள வாகனத்தை வாங்கியுள்ளேன். நான் அதில் ஐரோப்பா நாட்டைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பினேன். ஆனால், பாதி சுற்றுலாவின்போது எனது வாகனம் பழுதடைந்துவிட்டது. அது நவீன வடிவமைப்பைக் கொண்டிருந்ததால், யாருக்கும் அதை எப்படி பழுதுபார்ப்பதென்று புரியவில்லை. உடனே நான், இங்கிலாந்தில் எனக்கு காரை விற்ற நிறுவனத்தை அழைத்து எனது நிலையை விளக்கியதும், அவர்கள் உடனே இரண்டு மெக்கானிக்குகளை அனுப்பிவைத்தனர். மீதிப்பயணம் முழுவதும் எனது மனதில் ஐயோ, இதைத் திருத்தியதற்கு எவ்வளவு செலவாகுமோ; இதைப் பழுதுபார்ப்பவன் வேறு நாட்டிலிருந்து விமானம்மூலம் பிரயாணப்பட்டு வந்ததால், அதற்கு எவ்வவு பணம் தேவைப்படுமோ என்று யோசிப்பதிலேயே கழிந்தது. சுற்றுலா பயணம் முடிந்து திரும்பி எனது வீட்டுக்கு வந்தபொழுது, எந்தவித விலைப்பட்டியலையும் காணாது

ஆச்சரியப்பட்டேன். உடனே அந்த நிறுவனத்தை தொலைபேசியில் அழைத்து எனது விலைப்பட்டியலை அனுப்புமாறு கேட்டபொழுது, அவர்கள் அப்படியொரு விபத்து நடந்ததாகவோ, அவர்கள் திருத்துவதற்கு ஆட்களை அனுப்பியதாகவோ எந்தவிதப் பதிவுமில்லையென்று சொன்னார்கள். இப்படித்தான் நாமும் தேவனின் முன்பாக நியாயப்படுத்தப்பட்டுள்ளோம்.
(ரோமர் 3:22,24,26,28-30; 4:3,5,11,16; 5:1,9 9:30,33 10:4,9-10 11:10; கலாத்தியர் 2:21; 3:5-6,8,14,22,24; எபேசியர் 1:13; 2:28 பிலிப்பியர் 3:9; 1 திமோத்தேயு 1:16 என்பவற்றை வாசியுங்கள்).

## பரிசுத்தமாக்குதல் (**Sanctification)**

"Sanctification" என்னும் வார்த்தை இரண்டு லத்தீன் சொற்களை உள்ளடக்கியது. ‘sanctus’ என்பது பரிசுத்தமென்றும் ‘ficare’ என்பது உருவாக்குதலென்றும் அர்த்தமாகும்.

ஆகவே 1 கொரிந்தியர் 15:1-4ல் சொன்னதுபோல, நீங்கள் இயேசுக்கிறிஸ்துவானவர் எமது பாவங்களுக்குரிய விலையைச் செலுத்திவிட்டாரென்று விசுவாசித்து, அவருடைய கிரியைகளின்மீது நம்பிக்கை வைத்து நடந்தால், நீங்கள் நீதிமானாக நியாயப்படுத்தப்பட்டுவிட்டீர்களென்று அர்த்தமாகும். அப்போது உங்களது பரிசுத்தமாக்கலுக்குரிய பயணம் ஆரம்பமாகின்றது.

1976ம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆறாந் திகதியன்று அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் பனிப்போர் நடக்கையில், Viktor Ivanovich Belenko எனும் ரஷ்ய விமானியொருவர், தனது விமானத்தை ரஷ்யாவிலிருந்து யப்பானிலுள்ள அமெரிக்க விமானப்படைத் தளத்துக்குச் செலுத்திக் குடியுரிமை கேட்டு விண்ணப்பித்தார். அவரை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று புதிய அடையாளங் கொடுத்து, சில காலங்களின்பின் அவர் அமெரிக்கப் பிரஜையானார். அவரது அனுபவம் ஓரளவுக்கு பாவத்தில் மரித்திருந்த நாம், பின்பு தேவனில் உயிர்ப்பிப்பதை பிரதிபலிக்கின்றது.

விக்டர் ராஜ்யங்களை மாற்றினார்; அவருக்குப் புதிய அடையாளமும், புதிய அந்தஸ்தும் கிடைத்தன. அவர் இப்போது ஒரு அமெரிக்கர் - ரஷ்யரல்ல. அவர் இனிமேல் கொடுமையான ஆட்சிநடத்தியவர்களின் சட்டதிட்டங்களுக்கு அடிபணிய வேண்டியதில்லை. அவர் இப்பொழுது

எல்லா மூலவளங்களும், செழிப்பும் நிறைந்த ஒரு நாட்டின் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு விடுதலையடைந்துள்ளார்.

இந்த முன்னாள் ரஷ்ய விமானி இன்னும் அதே பழைய மனிதன்தான். ரஷ்யாவிலிருந்து புறப்படுவதற்கு முன்பு அவருக்கிருந்த அதே குணாதிசயம், அதே பழக்க வழக்கங்கள், மற்றும் அதே சமுதாய சிந்தனைகள் இப்போதும் இருக்கின்றன. ஆனால் அவருக்கு ஒரு புதிய அடையாளமும் ஒரு புதிய அந்தஸ்தும் இப்போது கிடைத்துள்ளன. ஒரு புதிய சுதந்திர நாட்டின் பிரஜையாக தற்போது அவருக்கு இந்தப் புதிய அடையாளமும் அந்தஸ்தும் கிடைத்திருந்தாலும், அவர் தன்னுடைய பழைய ரஷ்ய நாட்டின் அடிமைத்தனமான எண்ணங்களைத் தனது மனதிலிருந்து விலக்கிப் போடுதல் அவசியம்.

இந்த ரஷ்ய விமானி தன்னுடைய ரஷ்ய குடிமகன் என்னும் அடையாளத்தில் மரித்து அமெரிக்கப் பிரஜையென்னும் புதிய அடையாளத்தில் உயிர்பெறுகின்றார். அமெரிக்கப் பிரஜையெனும் குடியுரிமையின் மூலமாக, அவரால் அந்த நாட்டுக்குரிய எல்லா உரிமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அவர் தனது பூர்வீக அடையாளத்தை மாற்றியிருக்காவிடின், இவை ஒன்றையும் அனுபவித்திருக்க மாட்டார். வெவ்வேறு நாடுகளில் பிறந்து தற்போது இங்கிலாந்து நாட்டின் பிரஜைகளாய் மாறியுள்ள நம்மில் பலருக்கு, இதை இலகுவாய்ப் புரிந்துகொள்ள இயலும்.

விசுவாசிகளாகிய நாம் கொடூரமான பாவத்துக்கு அடிமையாயிருந்தபொழுது, பாவியென்னும் அடையாளத்துக்கு நாம் மரித்து, இயேசுக்கிறிஸ்துவின் ஐக்கியம் மூலமாக, பரலோகத்தில் தேவனின் குடிமகனாய் மாறிவிட்டோம். இந்தப் புதிய அடையாளத்தின்மூலமாய், பரலோகத்தின் எல்லா மூலவளங்களையும் அனுபவிக்கும் உரிமை நமக்குக் கிடைக்கின்றது. நாம் ஏற்கனவே நமது மாமிசத்தில் பாவத்துக்கு மரித்துள்ளபடியால், பாவம் நமது மாமிசத்தை ஆட்கொள்ளாது. இவையெல்லாம் நமது அடையாளம் மாறாவிடின் நடக்க வாய்ப்பில்லை. சட்டரீதியாக ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் ஐக்கியம், மரணம், உயிர்த்தெழுதலின் மூலமாக நமது அடையாளம் நிரந்தரமாக மாற்றப்பட்டுவிட்டது.

தேவனை நோக்கிச் செல்லும் பரிசுத்தப் பாதையில் நமது பயணத்தைத் தொடங்குகின்றோம். பின்பு தொடர்ந்து அதே பாதையில் நடக்கும்போது, மென்மேலும் பரிசுத்தமாக்கப்படுகின்றோம். இது ஒரே

நாளில் நிகழும் காரியமல்ல – உங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடைபெறும் ஒரு காரியமாகும்.

## படிப்படியாக (முன்னேறும்) பரிசுத்தமாக்கப்படுதல்

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது தொடர்ந்து நடைபெறும் ஒரு செயலாகும். நீங்கள் தேவனுடைய நீதிமானென்று அறிக்கைசெய்யப்பட்ட தருணத்திலிருந்து இது ஆரம்பமாகின்றது. தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்புரவாகும்படி நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டீர்கள். இது மனிதனுடைய முயற்சியையும் உள்ளடக்கியுள்ளது. ஆனாலும், தேவன் நியாயப்படுத்தப்பட்ட விசுவாசிக்குள் காரியங்களை நடப்பித்து, தேவகுணாதிசயங்களை அவருக்குள் உருவாக்குவார் (பிலிப்பியர் 2:13).

பரிசுத்தமாக்கப்படுதல் உடனடி வேலையல்ல. நியாயப்படுத்தப்பட்ட மனிதன் தொடர்ந்து தேவனுடைய சத்தத்துக்கும், சித்தத்துக்கும் தன்னை ஒப்புக்கொடுத்து, பாவத்துக்கு விலகி, பரிசுத்தத்தை நாடி, தன்னுடைய வாழ்வில் ஆவியின் கனிகளைக் கொடுக்கக்கூடிய தேவமனிதனாக மாறவேண்டும் (கலாத்தியர் 5:22).

ஒரு சுவாரசியமான விஷயம் - பரிசுத்தமாக்குதல் நியாயப்படுத்தலைத் தாங்குவதில்லை. அதாவது, நாம் பரிசுத்தமான வாழ்க்கை வாழாவிடினும் நாம் இன்னும் நியாயப்படுத்தப்பட்டுள்ளோம்.

பரிசுத்தமாக்குதலையும் நியாயப்படுத்தலையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்:-

| | நியாயப்படுத்துதல் | பரிசுத்தமாக்கல் |
|---|---|---|
| | உடனடியாக | தொடர்ந்து நடைபெறும் |
| உருவாக்கம் | வெளியே | உள்ளே |
| மூலதனம் | கடவுள் | கடவுள் |
| முயற்சி | எம்மிடமிருந்தல்ல | தேவனுடைய விருப்பத்துக்கு இணங்கி ஒப்படைத்தல் |
| பெறுபேறு | விசுவாசம் | தேவனுடன் நடத்தல் |

நீங்கள் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்படுகின்றீர்கள்.

ரோமர் 15:15 – *அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியாராகிய பலி* ***__பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு,__*** *தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்பொருட்டு...*

1 கொரிந்தியர் 1:2 - *கொரிந்துவிலே* ***__கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும்,__*** *பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய* ***கர்த்தராகிய*** *இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*

1 கொரிந்தியர் 6:1 - *உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும்* ***கர்த்தராகிய*** *இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்,* ***__பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்,__*** *நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*


1 திமோத்தேயு 4:4-5 - *தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல.* ***__அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.__***

எபிரேயர் 2:11 – *எப்படியெனில்,* ***__பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும்__*** *ஒருவரால் உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:*

உண்மையான பரிசுத்தமாக்கலென்பது கிறிஸ்துவின் சிலுவைப் பரிகாரமின்றி நடைபெற முடியாது. ஏனெனில், எமது பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பே, நாம் ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை ஆரம்பிக்கமுடியும்.

எபிரேயர் 10:14 - *ஏனெனில்* ***__பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை__*** *ஒரே பலியினாலே இவர்* ***__என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.__***

ரோமர் 5:21 - *ஆதலால்* ***<u>பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல,</u>*** ***<u>கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது</u>.***




Perfection

Being Sanctified

Definitive Sanctification

இங்கு குறிப்பிடப்படும் பாவமானது தனிப்பட்ட பாவச்செயலல்ல – பாவச் சார்புள்ளதாகும் (propensity). American Heritage அகராதியில் "propensity" என்னும் வார்த்தை ''ஒரு இயல்பான விருப்பம்; மனப்போக்கு'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல் இந்த பாவத்துக்கான இயல்பான விருப்பத்தைப் பற்றியே குறிப்பிடுகின்றார். ரோமருக்கெழுதிய புத்தகத்தில் பாவமென்னும் சொல் 45முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 3:9, 20; 4:8; 5:12-13, 20-21; 6:1-2, 6-7, 10-18, 20, 22-23; 7:7-9, 11, 13-14, 17, 20, 23, 25; 8:2-3, 10; 14:23). பாவங்களென்று பன்மையில் 4முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 3:25, 4:7, 7:5, 11:27).

ரோமரில் 49முறை பயன்படுத்தப்பட்டுள்ள ''பாவம்'' அல்லது ''பாவங்கள்'' என்னும் இந்த சொற்கள் கிரேக்க மொழியிலிருந்து உருவானவையாகும். "HAMARTEMA," எனும் வார்த்தை ரோமர் 3:25ல்

ஒருமுறையும், புதிய ஏற்பாட்டில் மற்றும் 3முறையும் (மாற்கு 3:28, 4:12; 1 கொரிந்தியர் 6:18) பயன்படுத்தப்பட்டுள்ளன. மீதி 48முறைகளில் கிரேக்க வார்த்தையாகிய “HAMARTIA” 47முறையும், “HAMARTANO” (ரோமர் 3:25ல்) ஒருமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. “HAMARTIA” ஒரு பெயர்ச்சொல், “HAMARTANO” என்பது வினைச்சொல். பெயர்ச்சொல் ஒரு இடத்தையும், வினைச்சொல் மனிதனின் செயலையுங் குறிக்கின்றன. ஆகவே ரோமர் புத்தகத்தில் ஒருமுறையைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் ‘‘பாவம்’’ அல்லது ‘‘பாவங்கள்’’ பாவத்தை நோக்கிய மனிதனின் இயல்பான மனப்போக்கையே குறிப்பிடுகின்றனவே தவிர, பாவத்துக்கான தனிப்பட்ட செயல்களையல்ல. நீங்கள் ‘‘பாவம்’’ என்பது பாவச்செயலையே குறிப்பிடுகின்றதென்று நினைப்பீர்களாயின், நீங்கள் பவுல் என்ன சொல்ல வருகிறாரென்பதைக் காணத் தவறிவிடுகின்றீர்கள்.

விசுவாசிகளாகிய எமது யுத்தம் பாவத்துக்கெதிரான தனிப்பட்ட செயல்களின் மீதல்ல, பாவத்துக்கேதுவான எமது உள்ளார்ந்த மனவிருப்பத்தின்மீதே. பாவத்தின்மீதான இச்சையை அடக்க முடிந்தால் பாவஞ்செய்வதும் குறையும். எமது தனிப்பட்ட பாவ இச்சையானது, பாவத்துக்கேதுவாக எமது மனதிலுண்டாகும் ஆசைகளுக்கெதிராக நாம் எவ்வாறு யுத்தம் புரிகிறோமென்பதிலேயே தங்கியுள்ளது ஆதாமினூடாகவே ‘‘பாவ இயல்பு’’ இவ்வுலகத்தில் நுழைந்ததென்று ரோமர் 5:12ல் சொல்லப்பட்டுள்ளது. மீட்பின்போது ‘‘பழைய மனிதன்’’ (ரோமர் 6:6) அல்லது பாவ இயல்பு மரித்தாலும், நாம் விட்டுவந்த அந்தப் பழைய மனிதனின் பாவ இச்சை எமது எண்ணங்களிலும், உணர்வுகளிலும் தங்கிவிடுகின்றது.

நாம் இயேசுக்கிறிஸ்துவை எமது மீட்பரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்கையில், நாம் பாவங்களிலிருந்து விடுதலையடைந்து, நிச்சயமான பரிசுத்தமாக்கல் நிகழும் புனிதத்துக்குள் நுழைகின்றோம். நீங்கள் இனிமேல் பாவியல்ல; கடவுளின் பரிசுத்தர். அப்பொழுது பரிசுத்த ஆவியின் பலத்தினால் நிகழும் தொடர்ச்சியான பரிசுத்தமாக்கல் நீங்கள் இவ்வுலகில் வாழும்வரை அல்லது அவரது இரண்டாம் வருகைவரையும், தொடர்ந்து இடம்பெறும். ஆதலால் நீங்கள் தேவனின் கட்டளைகளுக்குப் பணிந்து, பரிசுத்த ஆவியுடன் இணைந்து செயலாற்றவேண்டும்.

மத்தேயு 7:13-14 ***இடுக்கமான வாசல் வழியாய்*** *உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.* 14. ***ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது.*** *அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.*

ஆகவே வாசல் இடுக்கமாயிருக்கின்றது.
இயேசு சொன்னார் ''நானே வாசல்'' – யோவான் 10:9
இடுக்கமான இந்தப் பாதையை வேதாகமம் புதிய பாதையென அழைக்கின்றது.
வழி(பாதை): (அப்போஸ்தலர் நடபடிக்கைகள் 9:1; 18:25-26; 19:9, 23; 22:4; 24:14, 22)

இடுக்கமான வழியே புதிய வாழ்வுக்கு இட்டுச்செல்லுமென்று இயேசு சொன்னார்.
எபிரேயர் 10:19 – *ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர்* ***தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப்*** *புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,*

பழைய ஏற்பாட்டில் தேவன், தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டியினுள்ளே வாசஞ்செய்தார். பிரதானகுரு வருடத்தில் ஒரே ஒருமுறைதான் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே பிரவேசிக்கமுடியும். பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்த தடிப்பமான திரைச்சீலை, இயேசு சிலுவையில் உயிர்நீத்தபோது மேலிருந்து கீழாக இரண்டாகப் பிரிந்தது. அதுதான் அவரது மாமிசம்.

ஆகவே, இன்று நாம் கடவுளின் பிரசன்னத்தில் உட்பிரவேசிக்க விரும்பினால், நமது மாமிச இச்சைகளைத் துறந்து, தேவனின் பிரசன்னத்துக்கு இட்டுச்செல்லும் இடுக்கமான வழியே நடக்கவேண்டும்.
நீதிமொழிகள் 4:18 - *நீதிமான்களுடைய* ***பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.***

நீங்கள் பரிசுத்தத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கும்போது, உங்களது வெளிச்சம் பிரகாசமான அதிகாலை சூரியப்பிரகாசத்தைப் போலிருக்கும். அந்தநாள் முன்னேற, முன்னேற சூரிய வெளிச்சம்

இன்னும், இன்னும் பிரகாசமாகும். வேதவசனத்தில் சொன்னதுபோல, உங்களது வெளிச்சம் நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.
மத்தேயு 6:22. *கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.*

தொடர்ச்சியான பரிசுத்தமாக்குதலுக்குரிய சிறந்த உதாரணம் எமது கண்களாகும். நாம் ஒரு நிமிடத்துக்கு 16முறை வீதம், ஒருநாளைக்கு கிட்டத்தட்ட 23,040முறை கண்ணைச் சிமிட்டுகிறோம்!
ஒவ்வொருமுறையும் நாம் கண்ணை மூடும்போது எமது இமைகள் கண்களைத் தூய்மையாக்குகின்றன. ஏதாவது தூசியிருந்தாலும் அது ஒரு பக்கத்துக்குத் தள்ளப்படுகின்றது. அதன்மூலம் எமது பார்வை தெளிவாக்கப்படுகின்றது. இதேமாதிரி ஒவ்வொருநாளும், ஒவ்வொரு கணமும் எமது வாழ்க்கையை சோதனைசெய்து சுத்திகரிக்கவேண்டும். அதன்மூலம் தேவனுடனான எமது பாதையிலேற்படும் தடைகளையகற்ற முடியும்.


அப்படி செய்யும்போது எங்களுடைய முழு உடம்பும் வெளிச்சமாயும், மகிமையில் பிரகாசமுமாயிருக்கும்.
மத்தேயு 5:14. *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.*
15. *விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.* 16. *இவ்விதமாய்,* ***மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.***

உங்களது வெளிச்சம் பிரகாசிக்க, பிரகாசிக்க அதன்மூலம் கடவுள் மகிமைபெறுகிறார். இவ்வுலக வாழ்வில் நாம் முழுமையடைய முடியாது; ஆனால் நாம் மகிமையில் ஒருபடியிலிருந்து மறுபடிக்கு உருமாறமுடியும்.

## முடிவுரை

1. நான் ஆண்டவர் இயேசுவை எனது மீட்பரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டபோது, நான் நியாயப்படுத்தலுக்குள்ளாகி, தேவனில் நீதிமானாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளேன்.

2. உறுதியான பரிசுத்தமாக்குதல் ஆரம்பமாகி, பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலையடைந்து, பரிசுத்த ஆவியின் பலத்தினால், தேவனுடைய இராஜ்ஜியத்தில், அவரது மகனாக மாற்றப்பட்டு, பரிசுத்தவானாக எனதுபயணத்தை ஆரம்பிக்கின்றேன்.
3. இயேசுக்கிறிஸ்துவின் வார்த்தை மூலமாக தேவனும் பரிசுத்த ஆவியும் தொடர்ந்து என்னைப் பரிசுத்தப்படுத்துவதன்மூலம், நான் ஆவியின் கனிகளை உற்பத்திசெய்யும்பொருட்டு, அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து என்னைத் தேவனுக்கு அர்ப்பணிக்கிறேன்.
4. நான் மகிமையில் ஒருபடியிலிருந்து மறுபடிக்கு உருமாறுவதன்மூலம், கிறிஸ்துவின் வெளிச்சம் நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.
5. அவரை நேருக்குநேர் பார்க்கும்போது நான் அவரைப் போலிருப்பேன். அதேவேளையில் என்னைக் காண்கிறவர்கள், என்னில் இயேசுவைக் காண்பார்கள்!




7th February 2014